THIRU K. VINAYAKAM : Sir, are the Government in receipt of the report containing the recommendations made by the Estimates Committee headed by Thiru Ramachandran which inspected this area when the breach took place? Also, are the Government aware of the fact that machinery like lifters, bulldozers, etc., could not be made available to effect repairs immediately? So, what steps have the Government taken to see that this kind of delay does not occur at least in future?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : My hon. friend may put a separate question.

கிராம வளர்ச்சி இணை இயக்குநர் பதவி

*127 வினா—**திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) **Rural Development Joint Director** பதவியில் இது வரையில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகளே நியமிக்கப்பட்டு வந்ததற்குப் பதிலாக இப்போது ஐ.ஏ.எஸ். அல்லாத ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளது உண்மையா ?

(இ) ஆம் எனில், அற்கான காரணம் யாது ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : (அ) கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரி பதவியான இணை இயக்குநர் பதவிக்கு ஐ.ஏ.எஸ். அல்லாத எவரும் நியமிக்கப்படவில்லை. ஆனால் இவ்வலுவலகத்தில் துணை இயக்குநர் (கல்வித் தொடர்பு) அவர்கள் இணை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் கல்வித் தொடர்பான காரியங்களை மட்டுமே கவனிப்பவராவார். முழுத்துறைக்கும் இணை இயக்குநராக பணியாற்றிய ஐ.ஏ.எஸ். அதிகாரி இடம் காலியாகவே உள்ளது. அதனில் யாரும் நியமிக்கப்படவில்லை.

(இ) இந்த வினா எழவில்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : எவ்வளவு நாட்களாக அது காலியாக இருக்கிறது ? அந்தக் காலி ஸ்தானத்தில் இதுவரை யாரும் நியமிக்கப்படாமல் இருப்பதற்கான காரணங்கள் என்ன ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : திரு. கா. திரவியம் அவர்கள் கிராம வளர்ச்சி இயக்குநராக பதவியில் இருந்தபோது கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் இணை இயக்குநராக திருமதி சத்தியபாமா அவர்கள் பதவி வகித்து வந்தார்கள். பிறகு அவர்கள் உணவுப் பொருள் வழங்கும் துறைக்கு மாற்றப்பட்டு விட்டார். இந்தப் பதவியில் எவரும் நியமிக்கப்படவில்லை. இந்த வேலையைக் கவனித்து வருவதற்கு ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி—டைரக்டர் ஆஃப் ரூரல் டெவலப்மெண்ட்—இருப்பதால் இந்த இடம் இதுவரை பூர்த்தி செய்யப்படவில்லை.

திரு. எஸ். இராமச்சந்திரன் : கல்வித்துறையில் பல சீனியர் அதிகாரிகள் இருக்க இவர் மட்டும் இந்த இலாகாவிற்கு அழைக்கப்பட்டு பதவி உயர்வு கொடுக்கப்பட்டதன் காரணம் என்ன ? இவருக்கு ஐ.ஏ.எஸ். சிபார்சு செய்யப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : கல்விப் பிரிவிற்கு துணைத் இயக்குநராக இருக்கும் வெங்கடசுப்பிரமணியம் என்பவர் கோவை கோட்ட கல்வி அதிகாரியாக இருந்தவர். இந்தப் பதவிக்கு இவர் நியமிக்கப்பட்டதினால் அவர்களுக்கு எந்தவிதமான சம்பள மாற்றமும் ஏற்படுத்தித் தரவில்லை. ஏற்கெனவே அவர் ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிற காரணத்தினால் அந்தப் பதவி இணை இயக்குநர் பதவியாக மாற்றப்பட்டு, இணை இயக்குநரின் சம்பளத்தை அவர் ஏற்கெனவே பெற்றுவருவதால் அந்தப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தால் சில அதிகாரங்களை வழங்க முடியும், வேலைப் பளுவையும் குறைக்க முடியும் என்று கொடுக்கப்

பட்டது. அவரை ஐ.ஏ.எஸ். பதவிக்கு சிபார்ச் செய்திருப்பதாக தகவல் எதுவும் என்னிடம் இல்லை. அவர் ஒரு சீனியர் அதிகாரி என்ற முறையில்தான் தொடர்பாக அந்தப் பதவியில் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

திரு. நா. சௌந்தரபாண்டியன் : கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகத்தில் துணை நெறியாளராக ஒரு கல்வி அதிகாரி நியமிக்கப்பட்டிருப்பதைப் போல் இப்படி துணை அதிகாரிகளாக நியமிக்கப்படக்கூடிய இடங்களில் அந்தந்தத் துறையிலுள்ளவர்களை நியமிப்பதற்கு இந்த அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அப்படி அவசியமான நிலை ஏற்பட்டால் அப்போது அரசாங்கம் அதைப்பற்றிப் பரிசீலிக்கும்.

திரு. மு. ச. சிவசாமி : இந்த நியமனம் காரணமாக அதிருப்தி அடைந்த இந்த இலாகா சீனியர் அதிகாரிகள் இந்த நியமனத்தை ஆட்சேபித்து அரசுக்கு அனுப்பிய முறையீடுகளின் பேரில் அரசு அதற்கு பதில் கொடுக்காததற்குக் காரணமென்ன ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : இந்த அதிகாரி நியமிக்கப்பட்டதால் எந்த சீனியர் அதிகாரியும் பாதிக்கப்படவில்லை. ஆகவே, அப்படிப்பட்ட முறையீடுகள் எதுவும் அரசாங்கத்திற்கு வரவில்லை. ஆகவே நடவடிக்கைகள் எதுவும் எடுக்கத் தேவை இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி : அமைச்சர் அவர்கள் வெங்கடசுப்பிரமணியம் அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். அவருக்கு ஸீனியராக நிறையப் பேர்கள் இருக்க இவர் மட்டும் நியமிக்கப்படக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : துணை இயக்குநராக நியமிக்கப்பட்ட காலத்தில் அவர் அந்தப் பதவிக்குத் தகுதியுடையவராக இருந்தார். அவர் ஏற்கெனவே ஆயிரம் ரூபாய் வாங்குகிற சீனியர் அதிகாரி என்பதை நான் ஏற்கெனவே விளக்கினேன்.

சமூக நல ஊழியர்கள்

*128. **திரு. டி. மார்டின் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு அரசின் சமூக நல ஊழியர்களின் பணியினைச் சீரமைக்கும் திட்டம் பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் தற்சமயம் பரிசீலனை யுள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், சமூக நல ஊழியர்களுக்கு மாதாமாதம் சரியான நேரத்தில் உரிய சம்பளத்தைக் கொடுக்காமல் இருக்கிறார்கள் என்ற ஒரு குறையை அவர்கள் அரசுக்குத் தெரிவித்திருக்கிறார்களா ? அதன்மீது அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு " மா. முத்துசாமி : ஊராட்சி ஒன்றியங்களிலே உள்ள எல்லா அலுவலர்களுக்கும் மாதம் முதல் தேதியிலேயே சம்பளம் கொடுக்கவேண்டுமென்பதுதான் விதி. சமூக நல ஊழியர்கள் மட்டும் இதற்கு விதிவிலக்கு அல்ல. யாருக்கு சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்தால் அது என்ன காரணத்தினால் என்று விசாரிக்கலாம் ஒட்டுமொத்தத்தில் அத்தகைய குறிப்பு அரசாங்கத்தின் கவனத்திற்கு வரவில்லை.